பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கடர்10 திருவள்ளுவர் ஆண்டு2026 ஆடி02 செவ்வாய்க்கிழமை(18–07–1995)UTHAYAN A Lively National Tamil Daily கதிர்235

## பொன்னாலை, மூளாயிலிருந்தும் ஓடித்தப்பினர்!

# முன்னேறிய முழு பகுதிகளிலிருந்தும் ராணுவம் முற்றாகத் துரத்தியடிப்பு!

## அளவெட்டி தவிர்ந்த இடங்களுக்கு மக்கள் மீளச் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை 18

"முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கை மூலம் ஸ்ரீலங்கா இராணுவம் முன்னேறிய சகல பகுதிகளில் இருந்தும் துருப்புகள் விடுதலைப் புலிகளால் விரட்டியடிக்கப்பட்டன.

கடைசியாக பொன்னாலை, மூளாய்ப் பகுதிகளில் எஞ்சி நின்ற துருப்புகளும் நேற்று முன்தினம் இரவும் நேற்றுக் காலையும் புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து நேற்றுப் பிற்பகலில் பொன்னாலைப் பகுதியால் காரை நகருக்கு ஓடித்தப்பின.

இதனையடுத்து இடம்பெயர்ந்த பொதுமக்கள் அளவெட்டி தவிர்ந்த ஏனைய இடங்களுக்கு மீளச் சென்று குடியேறலாம் என விடுதலைப் புலிகள் நேற்றிரவு அறிவித்தனர். [உ-3-175]

இராணுவ நடவடிக்கையால் பாதிப்புற்ற

## மக்களுக்கு உதவும் சகலருக்கும் புலிகள் நன்றி தெரிவித்து அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 18

'புலிப்பாய்ச்சல்' நடவடிக்கைக்கு உதவிய நாட்டுப்பற்றாளர்கள் —

இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு பல்வேறு வகைகளாலும் உதவும் பொதுமக்கள்—

மற்றும் கூட்டுறவுத் துறையினர், வெகுஜன அமைப்புகள், மதஸ்தாபனங்கள், சிற்றூர்திச் சேவையினர் —

ஆகியோரை பாராட்டியும் நன்றி தெரிவித்தும் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அறிக்கை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தாக்குதலை உடன் நிறுத்தி படைகளை வாபஸ் பெறுக

## பிரசைகள் குழு ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடக்கும் இராணுவத் தாக்குதலை உடனடியாக நிறுத்தி, ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து துருப்புக்களை வாபஸ் பெறுக.

இவ்வாறு யாழ். பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றின் மூலம் கோரியுள்ளது.

"முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கையினால் சுமார் 300 பொதுமக்கள் கொல்லப்பட்டும், சுமார் 500 மக்கள் படுகாயமுற்று ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுமுள்ளனர் என்றும் —

இந்த இராணுவ நடவடிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டளைக் கப்பல் மட்டுமே ஞாயிறன்று மூழ்கடிப்பு

### புலிகள் நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காங்கேசன்துறை துறைமுகத்தினுள் ஊடுருவி கடற் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின் போது "எடித்தரா" கட்டளைக் கப்பல் மட்டுமே மூழ்கடிக்கப்பட்டதாக ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கிறது.

இக்கடற் சமரில் தரையிக்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸியில் ஆர்ப்பாட்டம்

மெல்போன், ஜூலை.18

யாழ். குடாநாட்டின் மீது ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டுள்ள படையெடுப்பைக் கண்டித்து [illegible] ஊர்வலம் ஒன்று நடந்த சனிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## படை பின்வாங்கவில்லை என்கிறது அரசுத் தரப்பு

"முன்னேறிப்பாய்தல்" இராணுவ நடவடிக்கை மூலம் கைப்பற்றிய பிரதேசங்களிலிருந்து துருப்புகள் வாபஸ் பெறப்படவில்லையாம்.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க கொழும்பில் நேற்று இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கிறார்.

உத்தி அடிப்படையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதேதவிர கைப்பற்றிய நிலைகளை நாம் விட்டுவிடவில்லை கைப்பற்றிய பிரதேசங்களில் புலிகளைத் தேடி அழிக்கும் நடவடிக்கை தொடர்கின்றது—இவ்வாறு அவர் மேலும் கூறினார். [உ]

## யாழ். செல்ல விடுங்கள்! செய்தியாளர் வற்புறுத்து

யாழ். சென்று உண்மைச் செய்திகளை நேரடியாகச் சேகரிப்பதற்கு தங்களை அனுமதிக்கும்படி கொழும்புப் பத்திரிகையாளர் வற்புறுத்திக் கேட்டுள்ளனர்.

யுத்தத் தகவல்களை வெளியிடுவதற்காக ஸ்ரீலங்கா இராணுவத் தரப்பினால் தினசரி கூட்டப்படும் பத்திரிகையாளர் மாநாட்டிலேயே நேற்று இக்கோரிக்கையைப் பத்திரிகையாளர் முன்வைத்தனர்.

இராணுவம் வெளியிடும் தகவல்களுக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கிடைக்கும் தகவல்களுக்கும் இடையில் பலத்த முரண்பாடு இருப்பது குறித்து அவர்கள் அதிருப்தி தெரிவித்தனர். [உ]

## சர்வதேச செஞ். குழுவின் மருந்துகள் தடுத்துவைப்பு

### புலிகளுக்கு அனுப்பப்படுபவையாம்

கொழும்பு, ஜூலை 18

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினால் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படவிருந்த மருந்துகளை கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் தடுத்து வைத்திருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இந்த மருந்துப் பொதிகளில் காயங்களுக்கு ஒட்டும் பிளாஸ்டர்கள், வேதனைத் தடுப்பு ஊசிகள் என்பன இருந்ததாகவும்—

வடபகுதியில் காயமுற்ற மக்களுக்குத் தேவைப்படும் மருந்துகள் இவை என கூறப்பட்டாலும், வடக்கில் காயமுற்ற விடுதலைப் புலிப் போராளிகளுக்கே அவை எடுத்துச் செல்லப்படுவதாகவும்—

சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குண்டு வீச்சு குறித்த அறிக்கை:

## செஞ்சிலுவை சர்வதேசகுழு வருத்தம் தெரிவித்ததாம்!

கொழும்பு, ஜூலை 18

நவாலி தேவாலயம் மீதான விமானக் குண்டு வீச்சுச் சம்பவம் குறித்து ஸ்ரீலங்கா அரசுக்கு முன்னறிவித்தல் தராமலேயே ஜெனிவாவில் இருந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அறிக்கை வெளியிட்டமை குறித்து —

ஸ்ரீலங்கா அரசு, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்கு மனவருத்தம் தெரிவித்ததாகவும் —

அரசுக்கு ஏற்பட்ட மனவருத்தம் குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கொழும்பில் உள்ள தலைமைப் பிரதிநிதி மார்க்கோ அல்தர் அரசிடம் வருத்தம் தெரிவித்ததாகவும்—

ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.


வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று மார்க்கோ அல்தரைச் சந்தித்துப் பேசியதாகவும் —

அப்போதே அரசுத்தரப்பின் மனவருத்தமும், அதற்குப் பதிலாக செஞ்சிலுவையினரின் வருத்தமும் தெரிவிக்கப்பட்டதாகவும் —

அச்செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருந்தது. [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமானப்படை வாங்கிய "அன்ரனோவ்" விமானம்



உக்ரைன் நாட்டிலிருந்து ஸ்ரீலங்கா அரசு தனது விமானப்படைக்குக் கொள்வனவு செய்த "அன்ரனோவ் ஆன் 32 பி" ரக மிகவேக தாக்குதல் விமானங்கள் மூன்றில் ஒன்றையே மேலே காண்கிறீர்கள்.

உக்ரைனின் "கீவ் ஏயர்கிராவ்ட் புரடெக்ஷன் அஸோஸியேஷன்" என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இந்த மூன்று விமானங்களும் கடந்த 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை— யாழ்ப்பாணத்தில் "முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமான தினத்தன்று— மாலையில் கொழும்பு வந்து சேர்ந்தன.

மிகவும் மலிவு விலையில்— மூன்று விமானங்களும் சேர்ந்து சுமார் 68கோடி ரூபாவுக்கு— இக்கொள்வனவு செய்யப்பட்டதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது. (5 ஆம் பக்கம் பார்க்க)

## காயமுற்றோர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

அளவெட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருந்த ஒருவர் நேற்று அங்கு மரணமானார்.

அளவெட்டி பத்தானை என்ற இடத்தைச் சேர்ந்த செல்லையா மகாலிங்கம் (வயது 38) என்பவரே மரணமானவராவார்.

இதேவேளை —

கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த தாவடி வடக்கைச் சேர்ந்த வ. சிவபாக்கியலஷ்மிதேவி (வயது 48) என்பவரும் நேற்று உயிரிழந்தார். (உ-15)

## காயமுற்றோர் நேற்றும் ஆஸ்பத்திரியில் சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

வலிகாமத்தில் பல்வேறு இடங்களில் இராணுவ நடவடிக்கைகளினால் படுகாயமுற்ற நிலையில் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் சிக்குண்டபலர்—

இராணுவம் அப்பகுதிகளில் இருந்து பின்வாங்கியதை அடுத்து சிகிச்சைக்காக யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்ட வண்ணமுள்ளனர்.

நேற்று கந்தையா அமிர்தலிங்கம் (வயது 55)— சுன்னாகம், வல்லிபுரம் கனகராசா (வயது 35) — சங்கானை, வி. நேசரத்தினம் (வயது 70) — சண்டிலிப்பாய், விவலிங்கம் வெற்றிவேல்நாதன் (வயது 70) —மூளாய் சிவசம்பு தனபாலசிங்கம் (வயது 72)— சண்டிலிப்பாய், குமாரசிங்கம் நல்லம்மா (வயது 72)— சண்டிலிப்பாய் ஆகியோர் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டனர் (உ-15)

## "மாஹோ" பொருள்கள் நேற்று இறக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 18

"மாஹோ" கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் நேற்று பருத்தித்துறை துறைமுகத்தில் ஆரம்பமாகின.

இக்கப்பலில் 3 ஆயிரம் தேசிய அடையாள அட்டைகள், ஆயிரத்து 950 பரல் மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய், பேக்கறிகளுக்கான உப மூலப் பொருள்கள் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை, யாழ். செயலகம், யாழ். பல்கலைக்கழகம், யாழ். மாநகர சபை உட்பட அரச திணைக்களங்களுக்கான ஜூன் மாத கோட்டா டீசல் என்பன எடுத்து வரப்பட்டுள்ளன.

இக்கப்பலில் உள்ள பொருள்களை அவசரமாக இறக்கிவிட்டு—

குடா நாட்டிற்கான— ஜூலை மாதத்திற்குரிய —கோட்டா எரிபொருளை மாத இறுதிக்குள் ஏற்றி வருவதற்கு வசதியாக கப்பலை உடனடியாக திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வடக்கே வந்து சேர்ந்த "லங்கா முடிதா" கப்பல் இன்று செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ-4-173]

### ஆக்கிரமிப்பு வேளையில்

## உயிரிழந்த பலரின் சடலங்கள் அடக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

படையினரின் 'முன்னேறிப் பாய்தல்' நடவடிக்கையின் போது இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் சிக்குண்டு உயிரிழந்த பொதுமக்கள் பலரின் சடலங்கள், படையினர் தமது பழைய நிலைகளுக்கு பின்வாங்கியதை அடுத்து தற்போது அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த 9 ஆம் திகதி திருவடிநிலைப் பகுதியில் மரணமான சபாபதி தேவராசா (வயது 16) என்ற இளைஞரின் சடலம் நேற்று அடக்கம் செய்யப்பட்டது.

வட்டுக்கோட்டையில் சட்டத்தரணி கந்தசாமி வீட்டில் உயிரிழந்த எழுபது வயதுக்கு மேற்பட்ட மூதாட்டி ஒருவரின் சடலம் மூன்று தினங்களின் பின் நேற்று முன்தினம் வீட்டு வளவுக்குள்ளேயே தகனம் செய்யப்பட்டது (உ-க-15)

## "ராடர்" கருவிகள் புலிகள் வசம்?

கொழும்பு, ஜூலை 18

கடந்த ஞாயிறு அதிகாலை காங்கேசன்துறை துறைமுகத்தினுள் தரித்திருந்த கட்டளைக் கப்பலைத் தகர்த்த விடுதலைப் புலிகள் அக் கப்பலில் இருந்த ராடர் கருவிகளைக் கைப்பற்றினர் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது. (உ-3)

## பருத்தித்துறை நீதிமன்ற அமர்வுகள்

பருத்தித்துறை தமிழீழ மாவட்ட நீதிமன்றில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகள் இன்று தொடக்கம் வழமைபோல் நடைபெறும் என தமிழீழ நீதி நிர்வாகத்துறை அறிவித்துள்ளது. [உ]

## பெண் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை. 18

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று மாலை ஏவப்பட்ட ஷெல் புன்னாலைக் கட்டுவன் பகுதியில் விழுந்து வெடித்ததில் ஒரு பெண் படுகாயமடைந்தார்.

புன்னாலைக் கட்டுவன் தெற்கைச் சேர்ந்த யேசுராஜன் சாரதா (வயது 29) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். [உ-15]

## கால்நடை அலுவலர்க்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

சங்கானை, வட்டுக்கோட்டை, தெல்லிப்பளை ஆகிய இடங்களில் உள்ள கால்நடை வைத்திய அலுவலகங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களை இன்று காலை 10 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள கால்நடை உதவிப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு சமுகம் தரும்படி, கால்நடை உதவிப் பணிப்பாளர் அறிவிக்கின்றார். [எ]

## வவுனியாவில் ஷெல்தாக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 18

வவுனியா முகாமில் இருந்து தாண்டிக்குளம் நோக்கி நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் ஷெல்தாக்குதல் நடத்தப்பட்டது.

வடக்கில் இருந்து வவுனியாவுக்கு பயணிகள் செல்லும் பாதையில் இந்த ஷெல்கள் வீழ்ந்த போதும் அச்சமயம் மக்கள் அங்கு இல்லாததால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ- 3)

## அரசின் தீர்வுத்திட்டம் இவ்வாரம் வெளியாகும்?

கொழும்பு, ஜூலை 18

இனப்பிரச்சினைக்கான அரசின் தீர்வுத் திட்டம் இந்த வாரத்தில் — எதிர்வரும் சனியன்று வெளியாகும் என்று நம்பகமாகத் தெரிய வருகிறது.

அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தில் உள்ளடக்கி இருக்கும் முக்கிய அம்சங்கள் குறித்து அரசில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விளக்கிக் கூறியிருப்பதாக அரசாங்க உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பாக ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு. எதிர்வரும் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் கூட இருக்கிறது. தெரிவுக்குழுவின் கூட்டத்தில் அதிகாரப் பரவலாக்கல் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு மறுநாள் அதாவது எதிர்வரும் சனிக்கிழமை 22ஆம் திகதி அது பகிரங்கப் படுத்தப்படும் என்று நம்பப் படுகிறது.

இதற்கிடையில், எந்த ஓர் இனத்துக்குமே பாரபட்சம் காட்டாத வகையிலான தீர்வுத் திட்டம் ஒன்றை அரசு [5 ஆம் பக்கம் பார்க்க]

## தேடப்படுவோர் விவரம்

★ சித்தன்கேணியைச் சேர்ந்த குஞ்சு என அழைக்கப்படும் யோகநாதன் சிவகாமசுந்தரியையும் அவரது தாயாரையும் சாவகச்சேரி நுணாவில் கிழக்கு சங்கம் வீதியைச் சேர்ந்த நாகராசா குடும்பத்தினர் தேடுகின்றனர்.

★ கிளிநொச்சி குருகுலம் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் கடமையாற்றும் சு. சபாரத்தினத்தின் குடும்பத்தவர்கள் எங்கிருந்தாலும் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் இருக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டச் செயலகத்தோடு தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது

★ பண்ணாகத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்வரட்ணம் அவரது மகன் லதனைத் தேடுகிறார்.

★ திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த ஏகாம்பரம் பேரின்பராசா வட்டு கிழக்கைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவி சங்கரி சச்சியானந்தராசாவைத் தேடுகின்றார்.

★ அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி ஞானசுந்தரம் அவரது சகோதரன் மைக்கேல் குடும்பத்தைத் தேடுகின்றார்.

★ அச்சுவேலி தெற்கு தாமு. மார்க்கண்டு அவரது சகோதரன் தாமு சிவலிங்கம் குடும்பத்தைத் தேடுகின்றார்.

★ திருநெல்வேலியைச் சேர்ந்த பொன். கணேசமூர்த்தி, நவாலியைச் சேர்ந்த அவரது நண்பர் கே. எஸ். முத்துலிங்கத்தைத் தேடுகின்றார்.

★ அராலி கிழக்கைச் சேர்ந்த திருமதி பி. அருட்செல்வி அவரது கணவர் அப்புத்துரை பிரபாகரனைத் தேடுகின்றார்.

★ சண்டிலிப்பாய் 7ஆம் கட்டையைச் சேர்ந்த மனோன்மணி ராசையா அவரது தந்தையான பொ. மாணிக்கத்தைத் தேடுகின்றார்.

★ வட்டு. கிழக்கைச் சேர்ந்த சி. மதியழகன் அவரது நண்பரான யாழ்ப்பாணக் கல்லூரி விடுதியில் படித்த அ. தனராஜையும், வட்டு. கிழக்கைச் சேர்ந்த அ. கனகு தம்பிராஜாவையும் தேடுகின்றார்.

★ கொடிகாமம் கச்சாய் தெற்கைச் சேர்ந்த அன்றா செல்வராணி வடலியடைப்பைச் சேர்ந்த ஐ. சிவனேசன் தியாகராசா குடும்பத்தினரைத் தேடுகின்றார்.

★ நுணாவில் மேற்கைச் சேர்ந்த சு. சிவபாக்கியம் அவரது மகன் சுப்பிரமணியம் தர்மபாலனைத் தேடுகின்றார்.

★ சாவகச்சேரி கெருடாவிலைச் சேர்ந்த ம. சிவஞானம் மானிப்பாயைச் சேர்ந்த திருமதி அஷ்டலட்சுமி மகாதேவா, மகள் கேமந்தினி ஆகியோரைத் தேடுகின்றார்.

★ குருநகர் அரசினர் வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் ஆ. சிறிபத்மநாதன் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தமது சக ஊழியரான மலேரியா இரத்தப்பரிசோதகர் எஸ். மகாலிங்கத்தைத் தேடுகிறார்.

★ இப்போது மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் தங்கியிருக்கும் கனகராசா கமல்ராசா சுன்னாகம் தெற்கு, பெரிய மதவடியைச் சேர்ந்த க. நாகேஸ்வரி, ந. கனகம்மா, பூரணி, நிசாந். நிரோபிகா, அபிராமி ஆகியோரைத் தேடுகிறார்.

★ இப்போது மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் தங்கியிருக்கும் கந்தன் ஜெயராமன் சுன்னாகம் தெற்கு, பெரிய மதவடியைச் சேர்ந்த சுகந்தி, ஜெயகௌரி, ஜெயராகினி, ஜெயசிலன், ஜெயவதனி ஆகியோரைத் தேடுகிறார்.


## விமான தொடர்பு சேவை

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு விமான தொடர் அம்புலன்ஸ் இணைப்பு சேவை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பயணம் பதிவு செய்யும் நேரம்:

காலை 9.00 முதல் மாலை 5.00 வரை

குறிப்பு

நோயாளர்களுக்கும், வயோதிபர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்

வாரத்தில் திங்கள், வியாழன் சேவை நடைபெறும்

தொடர்பு:

தர்மிசா ரவல்ஸ்

குமரன் பயணிகள் விடுதி

அறை இல. 6

67, அருச்சுனா வீதி [ஸ்ரான்லி வீதி],

யாழ்ப்பாணம்.

(சி/1693)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாத்தளையில் வாகனங்கள் சோதனை

கொழும்பு, ஜூலை. 18
ரத்தோட்டையில் இருந்து மாத்தளை நோக்கிச்செல்லும் வாகனங்கள் அனைத்தும், மாத்தளையில் வைத்து பொலீஸாரினால் கடும் சோதனையிடப்படுகின்றன.

மாத்தளை, மந்தண்டா வளைச்சந்தியில்இச்சோதனை இடம் பெறுகிறது.

# காயம் அடைந்த மற்றும் இறந்த சிப்பாய்களை மீட்பதற்குக் கூட அவகாசம் கிடைக்கவில்லை

### வெள்ளி அதிகாலைத் தாக்குதல் குறித்து மேலும் தகவல்கள்

கொழும்பு ஜூலை 18
வெள்ளியன்று புலிகள் அளவெட்டி-சண்டிலிப்பாய் பகுதியில் அதிரடித் தாக்குதல் நடத்திய சமயம் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் 10 ஆவது பட்டாலியனைச் சேர்ந்த இலகு காலாட்படையும்—

5 ஆவது பட்டாலியனைச் சேர்ந்த கெமுனுவாட்ச் படையினருமே — நிலை கொண்டிருந்தனர்.

கடுமையான சண்டை காரணமாக காயம் அடைந்தபடையினரை மீட்கும் வேலையும் இறந்த படையினரின் சடலங்களை எடுத்துச்செல்லும் பணிகளும் பாதிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

17 படையினரினதும் இரு அதிகாரிகளினதும் சடலங்கள் மட்டுமே சனிக்கிழமை வரை பலாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தன என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகத்தைச் சேர்ந்த லெப்டினன்ட்கேணல் ஈ.பி.டி. இஸட் அபேசேகரா சண்டேரைம்ஸ்க்குத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சடலங்களில் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்ட புக்காரா விமானத்தின் சாரதியான பிளைட் லெப்டினன்ட் டில் ஹான் பெரேராவினுடையது.

காயம் அடைந்த 6 அதிகாரிகளும் 89 படையினரும் பலாலி ராணுவ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் கேணல் அபேசேகரா தெரிவித்தார்.

படையினரின் வியூகங்களை ஊடுறுத்துக் கொண்டு புலிகள் நடத்திய இந்த அதிரடித் தாக்குதலில் குறைந்தது 79 படையினர் கொல்லப்பட்டனர் என்றும் —

150 படையினர் காயம் அடைந்தனர் என்றும் — சிரேஷ்ட ராணுவ அதிகாரிகள் தெரிவிப்பதாக 'சண்டே ரைம்ஸ்' வாரஇதழ் மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

### பாதுகாப்பு காரணங்களுக்காக

## பாகிஸ்தான் பிரதமரின் இலங்கை விஜயம் ரத்து

கொழும்பு, ஜூலை 18
அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள இருந்த பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ பாதுகாப்பு காரணங்களுக்காக தமது விஜயத்தை ரத்துச் செய்துள்ளதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

அடுத்த மாதம் இலங்கைக்கு மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொள்ள அவர் விருப்பம் தெரிவித்ததும்—

இலங்கை அரசு அவரின் விஜயத்தை பெரிதும் வரவேற்றதும்— தெரிந்தவையே.

தற்போது விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் நடக்கும் சண்டையில் பிரதமர் பெனாஸிரின் பாதுகாப்பு கேள்விக்குறியாக இருக்கும் என்பதால் அவர் தமது விஜயத்தை ஒத்திவைத்துள்ளதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாகிஸ்தான் இலங்கை அரசுக்கு ஆயுதங்களும், பயிற்சியும் அளித்துவருவதால் தற்போதைய நிலையில் அவரது விஜயம் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என சுட்டிக்காட்டப்பட்டது.

# புலிகள் இயக்கத்திடம் 24 ஏவுகணைகள்

### 3 பயன்படுத்தப்பட்டு விட்டனவாம்

கொழும்பு, ஜூலை. 18
நிலத்தில் இருந்து ஆகாயத்துக்கு தாக்கக்கூடிய 24 ஏவுகணைகளை விடுதலைப்புலிகள் இயக்கம் ஆப்கானிஸ்தானில் இருந்து வாங்கியதாகவும் அவற்றுள் மூன்று ஏவுகணைகளை அது பயன்படுத்திவிட்டதாகவும் ராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி ''சண்டேரைம்ஸ்'' வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆர்ஜென்ரினா தயாரிப்பான புக்காரா விமானம் கடந்த வெள்ளியன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.

இதற்கு முன் ஏப்ரல் மாதம் இரு அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டிருந்தன என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (இ)

## உல்லாசப் பயணிகளின் வருகை மீண்டும் வீழ்ச்சி

கொழும்பு, ஜூலை 18
இவ்வருடம் பெப்ரவரி மாதம் முதல் இலங்கைக்கு வரும் உல்லாச பயணிகளின் எண்ணிக்கை பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொ.ஐ.மு.அரசு பதவிக்கு வந்த பின் கடந்த ஒக்டோபரில் உல்லாச பிரயாணிகளின் வருகை சிறிது காலம் அதிகரித்து வந்தது.

ஆனால் இலங்கையில் சமாதானத்திற்கான அறிகுறிகள் மெல்லத் தேயத் தொடங்கியதை அவதானித்த உல்லாசப் பிரயாணிகள்தமது வருகையை கடந்த பெப்ரவரியில் குறைத்துத்தொடங்கினர்என்று செய்திகள் கூறுகின்றன. (ஒ-க)

## நல்லூரில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 18
தற்போதைய இராணுவ நடவடிக்கையினால் ஏற்பட்ட இடம்பெயர்வு சம்பந்தமான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்கு —

நல்லூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் யாழ். அரச அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பிரதேச செயலக ஊழியர்கள், கிராம அலுவலர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், நல்லூர் பகுதியிலுள்ள அகதிமுகாம் பொறுப்பாளர்கள், இப் பிரதேச செயலக பிரிவிற்குப் பொறுப்பான அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மதகுருமார்கள், ஏனைய நலன் விரும்பிகள் அனைவரையும் சமுகமளிக்குமாறு நல்லூர் பிரதேசச் செயலாளர் திருமதி க. சிவசிதம்பரம் கேட்டுள்ளார். [ஒ]

## வடக்கில் கூலிப் படையாக ஆப். கெரில்லாக்களாம்

### கொழும்புப் பத்திரிகை செய்தி

கொழும்பு, ஜூலை 18
முஜாஹிதீன் கெரில்லாக்கள் விடுதலைப் புலிகளுடன் கூலிப்படையாக இணைந்து வடக்கில் செயற்படுகின்றனர் என்று ராணுவ உளவுப்பிரிவு வட்டாரங்கள் தெரிவிப்பதாக சண்டே ரைம்ஸ் வாரஇதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் முஜாஹிதீன் கெரில்லாக்களிடமிருந்து வாங்கப்பட்ட ஏவுகணைகள் ''ஸ்ரிங்கர்'' (Stinger) ரகத்தைச் சேர்ந்தவை என்றும்—

சில மாதங்களுக்கு முன்னர் முல்லைத்தீவுக் கடலில் வைத்து விடுதலைப் புலிகளின் கப்பலில் இருந்து இந்த ஏவுகணைகள் இறக்கப்பட்டன என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுகிறது. [இ]

## ராணுவத்தில் மீனவர்கள்!

கொழும்பு, ஜூலை 18
இராணுவம் முதல் தடவையாக மீனவர்களையும் பாதுகாப்புக் கடமையில் அமர்த்தி உள்ளது.

இதற்காக 135 மீனவர்கள் இராணுவத்தில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு களுத்துறையில் உள்ள பூஸா முகாமிலும் அநுராதபுரத்திலும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் நடைபெற்றுவரும் வடக்கு—கிழக்குப்பகுதியில் சேவைக்கு அமர்த்தப்பட உள்ள இந்த மீனவர்கள் பாதுகாப்புக் கடமைகளுடன் படையினருக்கான மீனையும் பிடிப்பார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

தங்காலை, தொடன்துவ ஆகிய இடங்களின் இருந்தே இந்த மீனவர்கள் படைக்குத் திரட்டப்பட்டுள்ளனர். (இ)


தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

## அறிவித்தல்

நிறுவனங்கள் தமது விருப்பப்படி வகுப்புகளை வழமை போல் நடத்தமுடியுமெனின் அதற்கு எந்த தடையும் இல்லை என்பதை அறியத்தருகின்றேன்.

பொதுச் செயலாளர்,
யாழ். மாவட்டம்.

[சி-1689]



உ
சாவகச்சேரி

## அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தானம்

அன்புடையீர்!

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | : 18 - 07 - 95 | செவ்வாய் பகல் 10 மணி |
| சித்திரத்தேர் | : 26 - 07 - 95 | புதன் பகல் 10 மணி |
| தீர்த்தத்திருவிழா | : 27 - 07 - 95 | வியாழன் காலை 9 மணி |
| பூங்காவனம் | : 28 - 07 - 95 | வெள்ளி பி. பகல் 3 மணி |
| ஆடிப்பூரத் திருவிளக்குப் பூஜை | : 31 - 07 - 95 | திங்கள் பிற்பகல் 3 மணி |

பத்து நாட்களும் விரதம் அநுட்டிப்பவர்களும், திருவிளக்குப் பூஜையில் பங்கு கொள்ளும் மாதரசிகள் தேவஸ்தானத்தில் தங்கள் பெயர்களை பதிவு செய்தும் அம்பிகை அடியார்கள் இவ்விழா சிறப்புற நடைபெற பழவகைகள், எண்ணெய் அபிஷேகத் திரவியங்கள், பூமாலைகள், பொருள் உதவிகள் வழங்கி ஒத்துழைப்பு நல்கும்படி அன்புடன் கேட்கிறோம்.

அனைவரும் வருக அன்னை அருள் பெறுக!

சுபம்.

இங்ஙனம்
பிரம்மஸ்ரீ ம. மகாகணபதிஸர்மா
(ஆலய தர்மகர்த்தா)

[37589]


# ராணுவ நடவடிக்கை பூர்த்தியானதுமே ஐ. தே. கவின் எதிர்ப்பு நடவடிக்கை

கொழும்பு. ஜூலை 18
பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக ஐ.தே.க. ஆரம்பிக்கவிருந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் பின்போடப்பட்டுள்ளன.

தற்போது வடக்கில் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகள் முற்றுப்பெறும் வரை அரச எதிர்ப்பு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில்லை என்று ஐ.தே.க. முடிவு செய்துள்ளது.

இந்த ஆண்டு ஜூலை 15 ஆம் திகதிக்கு முன் நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தது.

அத்துடன் பாடசாலையில் இருந்து வெளியேறும் மாணவர்களுக்கு வேலை கிடைக்கும் வரை 1,500 ரூபா [illegible] அளிக்கப்பட்டிருந்தது.

இந்த வாக்குறுதிகள் மீறப்பட்டதை அடுத்து கடந்த வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் நாடு தழுவிய அளவில் எதிர்ப்பு நடவடிக்கைகளை நடத்த ஐ.தே.க. முடிவு செய்திருந்தது.

இந்த எதிர்ப்புநடவடிக்கைகள் இடம்பெறவில்லை பின்போடப்பட்டுள்ளதாக ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ)

## படையினர் தேவைக்கேற்ப ஊரடங்கு தொடருமாம்

கொழும்பு, ஜூலை 18
யாழ். குடாநாட்டில் ''முன்னோக்கிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு பிரகடனப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம்—

பாதுகாப்புப் படையினருக்குத் தேவை இருக்கும் வரை தொடர்ந்து அமுலில் இருக்கும்.

—இவ்வாறு இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே பிரிகேடியர் முனசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார். [ஒ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### மணமகன் தேவை

குற்றமற்ற 31 வயது (அனுஷம்) BSMS (யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவம்) பெண்ணுக்கு இத்துறையிலுள்ள மருத்துவர், எக்கவுண்டன் அல்லது பட்டதாரிகளைப் பெற்றோர் தேடுகின்றனர். பல்வேறு மணமகளுக்கும் தொடர்பு: மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (37586)

### மணப்பெண்கள் தேவை

குற்றமற்ற 35 வயது (கார்த்திகை 3) USA உயர் உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கும், 37 வயது மேற்கு ஜேர்மனிக்கும் தேவை. தொடர்பு: மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [37587]

### SPECIAL ANTENNA

To view Rupavahini, Madras Programmes Fixing Special, T. V. Antenna, Repairing Antennas, Radios-T. V. Decks, Clocks and Watches. Venus Dilka Watch and Radio Works, 284, Stanley Road (Ariyakulam Junction), Jaffna. Branch: KandyRoad, Chavakachcheri. (C-1686)

### காணவில்லை

7-7-95 வெள்ளிக்கிழமை முதல் கறுப்பு நிற ஜேர்மன் செபேட் பெண் நாய் (ஒன்றரை வயது) மானிப்பாயில் காணவில்லை. வைத்திருப்போர் தயவுசெய்து து.வைத்திஸ்வரன், மே/பா ஏ. தெய்வேந்திரராஜா, அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு என்னும்முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (37583)

### தவறிவிட்டது

கறுப்பும் வெள்ளையும் கலந்த ஓர் அல்ஷேசன் நாய் சுன்னாகம் புகையிரத நிலையத்துக்கு அண்மையில் 14-7-95 அன்று தவறிவிட்டது. கண்டவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் தரப்படும். விமாகி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் அல்லது மேற்றன் திருஞானசம்பந்தர் இல்லம், உரும்பிராய் வீதி, உரும்பிராய். (37585)

### புலமைப் பரிசில் பரீட்சை

புதிய பாடத்திட்டத்திற்குரிய வழிகாட்டி "பொது விவேகம்" 97/- வினாத்தாள் I, IIற்குரியது. வெளியீடு: அன்ரன் பதிப்பகம். எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். 18% கழிவுடன் மொத்தமாகப் பெற யாழ்ப்பாணப் புத்தக நிலையம், 448, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். (சி-1717)

## திருத்தம்

நேற்றைய உதயனில் வெளியான மல்லாகத்தைச் சேர்ந்த கனகசபை இராமநாதன்என்பவரின் மரண அறிவித்தலில் தகவல் தந்த தா. கண்ணுத்துரை என்பவர் இறந்தவரின் பெறாமகன் எனத் திருத்தி வாசிக்கவும்.

(37588)

## கேள்வி அறிவித்தல்

1995-06-26 ஆம் திகதி பத்திரிகையில் வெளியிடப்பட்ட யாழ். பிரதேச கல்வித்திணைக்களத்திற்குத் தேவையான தளபாடங்கள் வழங்கலும் விநியோகித்தலும் சம்பந்தமாக 1995-07-19 ஆம் திகதி காலை 10.00 மணிக்குக் கேள்விச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட இருந்த கேள்விகள் பின்போடப் பட்டுள்ளன, ஏற்றுக் கொள்ளப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

95-07-17 (சி-1691)

## அறிவித்தல்

எமது நிறுவன ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் இன்று வழமைபோல் சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

— அதிபர்

ESTD: 1973 REGD: No J/7993

**The Express Institute**

IRUPALAI - KOPAY

(சி-1688)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 07 — 07 — 1945

மறைவு: 29 — 07 — 1994

### இராசம்மா கணபதிப்பிள்ளை
(சரோஜா)

திதி: 18 — 07 — 1995

ஆண்டு பல கடந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் அகலாது
தங்களின் ஆத்மா சாந்தியடைய
திருவெண்காட்டு சித்தி விநாயகனை –
பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்;
கணவர், குடும்பத்தினர், ராஜன்,
உற்றார், உறவினர்.

அம்பிகை வாசம்,
மண்டைதீவு. [37554]

## 18-ம் பிறந்த நாள் ஞாபகார்த்தம்



மலர்வு: 18 — 07 — 1977

உதிர்வு: 24 — 02 — 1987

### செல்வி ஆரணி ஜெயதாசன்
(தங்கா)

பெற்றார், உற்றார் உறவினர்க்கு
பேரிடர் ஒன்றும் அணுகாமல்
குற்றாலத்தான் அருள் பெறவே
கூட இருந்து காத்திடடி.

உன்னருளால் வாழும்;
அன்புப் பெற்றோர்

செண்டா வளவு,
இருபாலை கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் லயன்ஸ் உறுப்பினருக்கு

நல்லூர் லயன்ஸ் கழக உறுப்பினர்களை இன்று செவ்வாய் மாலை 4 மணிக்கு நல்லூர் லயன்ஸ் கழக செயலாளரின் நல்லூர் குறுக்கு வீதி இல்லத்தில் அவசரமாகக் கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

## ஈராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 04 — 10 — 1941

உதிர்வு: 18 — 07 — 1993

### அமரர் மு. யோகசௌந்தரி

திதி: சதுர்த்தசி 26 – 07 – 1995

மாதர்குல மாணிக்கமே, மனைவிளக்கே, தாய் தந்தைபோல் எங்களை வளர்த்து ஆளாக்கிய எங்கள் அன்புத்தெய்வமே! அறநெறி தழுவி இல்லறம் சிறக்க விருந்தோம்பல் செய்து, நற்சேவைகள் புரிந்த உங்களை, எங்கள் உள்ளத்தில் ஆழமாகப் பதித்து வைத்திருக்கின்றோம்.

உங்களது இலட்சியங்கள் நிறைவேறவும், ஆத்மா சாந்தியடையவும், எங்கள் முதலி அம்மனை பிரார்த்திக்கின்றோம்.

அன்புத் தாய், சகோதரங்கள்,
மருமக்கள், உறவினர்கள், நண்பர்கள்.

"யோகவாசா"
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. [37588]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### செல்வி அருந்தவராஜா ஜகல்யா
(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆண்டு - 1 மாணவி)

மலர்வு: 28 — 03 — 1989

உதிர்வு: 18 — 06 — 1995

அழகான அரும்பாகி மொட்டாகி நிலவாகி
கருகாகி விட்ட எங்கள் செல்வமே!
அனலாகி தணலாகி கனவாகி கொதிக்கும்
எம் நெஞ்சங்களில் நிழலாகி ஒளியாக
தெய்வமாக என்றென்றும் நிறைந்திருப்பாய்

இன்று 18-07-1995 இல் நடைபெறவிருக்கும் மதிய போசனத்தில் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அப்பா, அம்மா, தம்பி,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

டச்சு றோட்,
இருபாலை. [37590]

உதயன்
292/2 நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.

## தயக்கமேன்?

யாழ்ப்பாணத்தின் மீது, தான் பெரும் எடுப்பில் தொடங்கிய இராணுவ நடவடிக்கையை அரசாங்கம் நிறுத்திவிட்டதா? அல்லது ஒத்திவைத்திருக்கிறதா? திடீரென மீண்டும் தமிழர் இன அழிப்பை இங்கு தொடங்குமா?

''முன்னேறிப் பாய்தல்'' நடவடிக்கை மூலம் தாம் ஆக்கிரமித்த பகுதிகளில் இருந்து, விடுதலைப் புலிகளால் விரட்டி அடிக்கப்பட்டது குறித்து— அந்தப் பெரும் தோல்வி குறித்து — இராணுவமோ அரசோ இன்னும் மூச்சு விடவில்லை!

விடுதலைப் புலிகளிடம் தோற்றுவிட்டதாகக் காட்டிக் கொண்டால், ஏற்கனவே வெளித்தெரிந்த தமது திறமையின்மையும், பலவீனமும் மேலும் உறுதி செய்யப்பட்டு விடலாம் என்று இராணுவ வட்டாரங்கள் வெட்கித் தலைகுனிந்து போயிருக்கலாம்.

அரசியல் தீர்வுகாணும் பாதையை மூடிவிட்டு, இராணுவ வழித் தீர்வைத் தேர்ந்தெடுத்த அரசாங்கம், அது தோல்வி கண்டுவிட்டதை எந்த முகத்தோடு சிங்கள மக்களுக்குக் கூறுவது என்று தெரியாமல் திகைத்து நிற்கக் கூடும்.

நாடாளுமன்றத்தில் கூறியது போலவே, வடக்கு போர் முனைக்கு சீருடையுடன் தளபதிகள் சகிதம் வந்த பாதுகாப்புபிரதிஅமைச்சர் அனுருத்த, விடுதலைப் புலிகளிடம் தோல்வி கண்டுவிட்டார். அதற்குப் பொறுப்பேற்றுத் தமது பதவியை அவர் இதுவரை ராஜினாமாச் செய்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யவில்லை.

அவர் தமது தோல்வியை மறைப்பதற்கு அல்லது விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்று கூறுவதற்குப் புதிதாக ஒரு கருத்துடன், புதிதாக ஒரு திட்டத்துடன் தலையை உயர்த்தலாம்.

நிலைமை இவ்வாறு மந்தரமாக இருக்க—

அரசு போரை உடனடியாக நிறுத்தி ஆக்கிரமிப்பு இராணுவத்தை வாபஸ் பெறவேண்டும். போர் நிறுத்தத்தை அறிவித்து அரசியல் தீர்வுக்கான சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும்— என்று மட்டக்களப்பு மாவட்ட எம். பியான ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதியிடம் கேட்டிருக்கிறார்.

அரசாங்கம் தனது தோல்வியை ஏற்றுக் கொண்டு உடனடியாக இதனையே செய்ய வேண்டும். அரசு அவ்வாறு செய்ய மனமிசையும் என்று எதிர்பார்க்க முடியாது. சந்திரிகாவுக்கு ரோசமிருந்தால் அவரும், அவரது அரசும் உடனடியாக ராஜினாமாச் செய்யவேண்டும். ஆனால் அவ்வாறு செய்ய முன்வரமாட்டார்கள்.

எனவே—

நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ் எம். பிக்கள் 27 பேரும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்துழைப்புடன் அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து அதனை வீழ்த்த வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி இப்படி ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்கிறது. ஆனால் தமிழ் எம். பிக்கள்..,.?

தமிழ் மக்களின் நலனில் உண்மையான அக்கறை இருந்தால் தமிழ் எம். பிக்கள் எனப்படுவோர் அதற்குத் தயங்க நியாயமில்லை. வெறும் வாய்ச்சொல் வீரர்களே அவர்கள்!

### யாழ்: அரச அதிபர் அறிவிப்பு

நவாலி குண்டு வீச்சில்

## ஊனமுற்றோர் மற்றும் உயிரிழந்தோர் விவரம் பதிவு

யாழ்ப்பாணம், ஜூலை. 18

நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட குண்டுவீச்சில் இறந்தோர், ஊனமுற்றோர் தொடர்பான விடயங்கள் இன்றும், நாளையும் நல்லூர் பிரதேச செயலகத்தில் தற்காலிகமாக இயங்கும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அலுவலகத்தில் பதிவு செய்யப்படவுள்ளது.

இதற்கான பதிவுகளைசெய்வதற்கு சம்பந்தப்பட்டகிராம சேவையாளர் மூலமாக ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டோர் தமது குடும்ப விவரங்களை நேரில் சென்று பதிய முடியாதிருப்பின் யாரேனும் உறவினர், நண்பர்கள் மூலமாக நல்லூர் பிரதேச செயலகத்திற்கு சென்று தகுந்த ஆவணங்கள், விவரங்களுடன் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

இப்பதிவுகள் யாவும் சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் நேரடிமேற்பார்வையில் நடைபெறுமென்றும் —

சம்பந்தப்பட்டோர் இவ்விடயத்தில் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் —

யாழ் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (உ-4)

## அகதிமுகாம் பகுதிகளில் தாக்குதல் நடத்தாதீர்!

யாழ்ப்பாணம், ஜூலை 18

இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் முகாம்கள் அமைந்துள்ள பகுதிகளில் தாக்குதல்களைத் தவிர்க்குமாறு பாதுகாப்பு அமைச்சிடம் யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

''முன்னேறிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கையின் பின்னர் யாழ் மாவட்டத்தின் தற்போதைய நிலை குறித்த அறிக்கை ஒன்றை யாழ். அரச அதிபர் தயாரித்துள்ளார். அந்த அறிக்கையிலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை ஜனாதிபதிக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் உடனடியாக அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அரச அதிபர் க. பொன்னம்பலம் நேற்று செயலகத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

தமது அறிக்கையுடன் இப்போது அகதி முகாம்கள் அமைந்துள்ள இடங்கள் பொறிக்கப்பட்ட வரைபடம் ஒன்று இணைக்கப்பட்டிருக்கிறது எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 13 ஆம் திகதிவரை இறந்த பொதுமக்கள், காயமுற்றோர் இடம்பெயர்ந்தோர் பற்றிய புள்ளி விவரங்களும் அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. நவாலி தேவாலயத் தாக்குதல் குறித்தும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ-4]

## உணவு எடுத்து வருவதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 18

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை யாழ் மாவட்டத்துக்கு தொடர்ந்தும் கொண்டு வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் அறிவித்துள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி ஆரம்பமான இராணுவ நடவடிக்கையால் மக்கள் அனுபவித்த இன்னல்கள் குறித்தும், அதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் அவர் பத்திரிகைகளுக்கு அறிக்கை ஒன்றை நேற்று முன்தினம் விடுத்துள்ளார்.

புகலிடம் தேடியோர் தாக்குதலுக்கு உள்ளானமை, உயிரிழப்புகள், தமது பிரதேசத்தில் இருந்து வெளியேற முடியாமல் தவித்தமை, உயிருக்கும், உடைமைக்கும் எதுவித பாதுகாப்பும் அற்ற சூழலை உருவாக்கியது என்றும் —

இந்த அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை புரிந்த சகலருக்கும் தமது நன்றியைத் தெரிவிப்பதாகவும் — அரச அதிபர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். [அ-3]

## பென்ஷன் வவுச்சர்கள் வங்கிகளில் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ் மாவட்ட ஓய்வூதியர்களின் ஜூலை மாத பென்சன் வவுச்சர்கள் ''மாஹோ'' கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளன. பெரும்பாலான ஓய்வூதியர்கள் இடம்பெயர்ந்திருப்பதால் வவுச்சர்களை சம்பந்தப்பட்ட வங்கிக் கிளைகளில் வைத்தே விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் வங்கிகளில் பென்ஷன் வவுச்சர்களை பெற்றுக்கொள்ளக் கூடியதாக வவுச்சர்கள் தரம்பிரித்து அனுப்பி வைக்கப்படும்.

அன்றைய தினம் சம்பந்தப்பட்ட வங்கிக் கிளைகளை கூடுதலான நேரம் திறந்து வைத்து ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

இதேவேளை, வங்கிகளில் வைத்து வவுச்சர்கள் விநியோகிப்பதில் ஆளணி பற்றாக்குறை இருப்பின் அதற்கென யாழ். செயலகத்திலிருந்து ஊழியர்களை அனுப்பிவைக்கவும் நடவடிக்கைஎடுக்கப்படுமென்றும் யாழ். அரச அதிபர் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். (உ-4)

## புக்காராவின் பெறுமதி ரூ.13 கோடி

கொழும்பு, ஜூலை.18

கடந்த வெள்ளிக்கிழமை விடுதலைப்புலிகளால் [illegible] வீழ்த்தப்பட்ட புக்காரா[illegible]னத்தின் பெறுமதி பதின்மூன்றரைக்கோடி ரூபாவெனத் [illegible] (உ-3)

## ஈழத்தமிழருக்கு ஆதரவாக தமிழகத்தில் போராட்டம்

சென்னை, ஜூலை 18

திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் தோழமைக் கட்சிகளான இந்திய கம்யூனிஸ்ட், முஸ்லிம் லீக்கின் இந்திய நஷனல் லீக் பிரிவு, போர்வேட் புளொக் ஆகியன ஒன்றிணைந்து பல்வேறு அரச அலுவலகங்களுக்கு முன்னால் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தின.

யாழ். குடாநாட்டில் ஸ்ரீலங்கா அரசாங்கம் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கையை ஆட்சேபித்து நேற்றும் தமிழ் நாட்டில் மறியல் போராட்டங்கள், உண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

கட்டளைக் கப்பலைத் தகர்த்த

## கடற்புலிகளின் ஊர்தி நாளையும் மறுதினமும்!

யாழ்ப்பாணம், ஜூலை 18

''எடித்தரா'' கட்டளைக் கப்பலைத் தகர்த்து வீரகாவியமான லெப்டினன்ட் கேணல் நரேஷின் வித்துடலும், மூன்று கடற்கரும்புலிகளினதும், 13 கடற்புலிகளினதும் திருவுருவப் படங்களும் தாங்கிய கப்பல் வடிவிலான ஊர்தியில் நாளையும், நாளை மறுதினமும் மக்களின் வீர வணக்கத்துக்காக குடாநாட்டில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படவிருக்கிறது.

நாளை காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் இருந்து புறப்படும் ஊர்தி உரும்பராய், புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார்கோவிலடி, யாழ். நகர், ஆஸ்பத்திரி வீதி, சின்னக்கடை, குருநகர், அரியாலை ஆகிய பகுதிகள் ஊடாகச் செல்லும்.

பின்னர் கண்டி வீதியூடாக நாவற்குழி, கைதடி, நுணாவில், சாவகச்சேரி, மீசாலை, புத்தூர்ச் சந்தி, கொடிகாமம், மிருசுவில், எழுதுமட்டுவாழ், நாகர்கோவிலைச் சென்றடையும்.

மறுநாள் காலை 9 மணிக்கு நாகர்கோவில், அம்பன், குடத்தனை, மணற்காடு, மந்திகை, பருத்தித்துறை கடற்கரைவீதி வழியாக வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, வதிரி, நெல்லியடிச் சந்தியை ஊர்தி அடைந்த பின்னர் நெல்லியடிச் சந்தியில் பிற்பகல் 5 மணிக்கு கூட்டம் நடைபெறும்.

அதன்பின் வடமராட்சி மாவீரர் துயிலுமில்லத்தை ஊர்தி சென்றடையும். (உ-3)

### விமானப்படை...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விமானத்தை இத்தாலி போன்ற நாட்டிடம் வாங்குவது என்றால் ஒவ்வொரு விமானத்துக்கும்நூறு கோடி ரூபாவரை கொடுக்க வேண்டியிருந்திருக்கும் என்றது அப்பத்திரிகை.

மேற்படி கொள்வனவுவிலையின் பத்துவீதத்தைச் செலுத்தி அதற்கான ஒப்பந்தத்தில் ஸ்ரீலங்கா அதிகாரிகள் கையெழுத்திட்டு இரண்டு மணி நேரத்தில் மூன்று விமானங்களும் ஸ்ரீலங்காவுக்கு புறப்பட அனுமதிக்கப்பட்டு விட்டதாகவும் அப்பத்திரிக்கை குறிப்பிட்டது.

இந்தப் பத்துவீத பணத்தைச் செலுத்துவதில் ஏற்பட்ட தாமதமே, விமானங்கள் கொழும்பு வந்தடைவதற்கு பிந்தியதற்குக் காரணம் என்றும் கூறப்பட்டது.

20 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கக் கூடிய இந்த விமானம் ஆறு தொன் சுமையையும், அறுபது துருப்புக்களையும், பரா துருப்புகளையும், வாகனங்களையும் தாங்கிச் செல்லக் கூடியது என்றும் —

மிக வேகமாகப் பறக்கும் இந்த வகை விமானங்கள் இரத்மலானையிலிருந்து பலாலிக்கு 35 நிமிடங்களுக்கும் குறைந்த நேரத்தில் வந்து சேர்ந்து விடக் கூடியது என்றும் —

விமானப்படை உயரதிகாரிகளை மேற்கோள்காட்டி அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

விமானங்கள் வந்து சேர்ந்த அடுத்த நாள், அதில் பொருத்தப்பட வேண்டிய — விமான எதிர்ப்பு ஏவுகணைகளை எதிர்த்துத் தாக்கி அழிக்கும் ஏவுகணைகள் — தனியாக கொழும்புக்கு எடுத்து வரப்பட்டன.

இந்த விமானங்களைச் செலுத்துவதற்கு ஸ்ரீலங்கா விமானிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டிருந்தாலும் —

இந்த விமானங்களைச் செலுத்துவதில் அவர்கள் நன்கு பரிச்சயம் அடையும் வரை அவர்களுக்கு —

மேற்படி விமானங்களுடன் கொழும்பு வந்துள்ள உக்ரைன் விமானிகள் உதவுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## லண்டன் விஜயம் ரத்து

ஜனாதிபதி சந்திரிகா குறுகிய கால விடுமுறையில் கடந்த புதன்கிழமை மாலை லண்டன் புறப்பட்டுச் செல்லவிருந்ததாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் தற்போது வடக்கில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்ததன் காரணமாக தனது முடிவை அவர் இறுதி நேரத்தில் மாற்றிக் கொண்டு லண்டன் செல்லும் திட்டத்தை கைவிட்டார்.

### அரசின்...

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன் வைக்குமேயானால், அதை ஐ. தே. க. ஆதரிக்கும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோரள கூறியிருக்கிறார்

### கட்டளை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும் கப்பல் ஒன்றும் தகர்த்தெறியப்பட்டதாக தாங்கள் வெளியிட்ட செய்தி, தவறானது எனத் தற்போது தெரிய வந்துள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அங்கு நின்ற தரையிறக்கும் கலன் மீது தாக்குதல் நடத்தச் சென்ற கரும்புலிகள் படகு ஒன்று விபத்துக்குள்ளானது என்றும் —

இதனால் தரையிறக்கும் கலன் தப்பிக் கொண்டது என்றும் —

இப்படகு விபத்துக்குள்ளானதால், இப்படகில் சென்ற கடற் கரும்புலிகள் பிரிவைச் சேர்ந்த செவ்வானம் என்ற போராளி உயிருடன் மீட்கப்பட்டார் என்றும் —

விடுதலைப் புலிகள் மேலும் அறிவித்துள்ளனர்.

இச்சமரில் வீரமரணம் அடைந்த லெப்டினன்ட் கேணல்நரேஷ் கடற்புலிகளின் கடற் தாக்குதல் பிரிவுத் தளபதி என்றும், லெப்டினன்ட் கேணல் மாதவி கடற்புலிகளின் மகளிர் பிரிவு விசேட தளபதி என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது. (உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## துரைசிங்கம் கேமாவதி
## (கடற்புலி லெப்டினன்ட் தவமலர்)

கல்லறவத்தை மாரீசன்கூடல் இளவாலையை பிறப்பிடமாகக் கொண்ட துரைசிங்கம் கேமாவதி 16-07-1995 ஞாயிற்றுக்கிழமை வீரச்சாவு அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைசிங்கம் தேவகுஞ்சரியின் அன்பு மகளும், திருமதி லவாதேவகி, (கனடா) உமா, உதயசுதன் (கனடா), ஸ்ரீகரன் (மாவீரன் 2ஆம் லெப். தனேந்திரன்), கிருபன் ஆகியோரின் அருமைச் சகோதரியும், கனகசபாவதி, குணவதி, சாந்தநாயகி கிருஷ்ணபாலச்சந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புப் பெறாமகளும், விஜயசுந்தரம், சத்தியபாமா, கருணாநந்தன், இந்துமதி (கனடா) ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் திருவுருவப்படம் 18-7-1995 "ஸ்ரீபதி" மஞ்சத்தடி இணுவில் இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ஆ. விஜயசுந்தரம்
(மாமன்)

"ஸ்ரீபதி"
மஞ்சத்தடி,
இணுவில்.

(37593)

## திருமதி
## சத்தியேஸ்வரி ஜெகதீஸ்வரன்
## (நயினாதீவு)

நயினாதீவு 2 ஆம் வட்டாரத்தைச்சேர்ந்த திருமதி சத்தியேஸ்வரி ஜெகதீஸ்வரன் நயினாதீவில் 16-7-95 ஞாயிற்றுக்கிழமை காலமானார், இவர் மு. ஜெகதீஸ்வரன் [கனகசூரியம் அன் கோ கொழும்பு] அன்பு மனைவியும், பிரியங்காவின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நா. கார்த்திகேசு கமலாம்பிகை தம்பதியினரின் அன்பு மகளும் திரு திருமதி முத்தையா தம்பதியினரின் அன்பு மருமகளும், சிவகடாட்சம், கமலேஸ்வரி, மங்களேஸ்வரி, சேதீஸ்வரன், சுந்தரேஸ்வரி, பாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை நயினாதீவில் நடைபெற்றன. இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
நா. கோபாலகிருஷ்ணன்
[சிறிய தந்தை]

30/12, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

[37594]

## தம்பிராசா சதீஸ்வரன்
## போராளி - லெப் சிவா [சிவம்]

கோண்டாவில் மேற்கு கோண்டாவிலைச் சேர்ந்த தம்பிராசா சதீஸ்வரன் [போராளி - லெப் சிவா (சிவம்), 14.7.95 இல் புலிப்பாய்ச்சல் நடவடிக்கையில் வீரச்சாவடைந்து விட்டார். அன்னார் தம்பிராசா ஜெயரெட்ணம் தம்பதியினரின் அன்பு மகனும், சாந்தா [கனடா] கருணாகரன் [சுவிஸ்], தயாபரன் [ஜெர்மன்] பிரபாகரன் [கனடா] சுகந்தினி [யாழ்.பல்கலைக்கழகம், ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.7.95 இல் நடைபெற்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க.தம்பிராசா
[தந்தை]

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

[37595]

## திருமதி
## வள்ளியம்மா கிருஷ்ணபிள்ளை

டச் வீதி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த திருமதி வள்ளியம்மா கிருஷ்ணபிள்ளை 17-7-95 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சரவணமுத்து கிருஷ்ணபிள்ளையின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி புவனேஸ்வரி (ஆசிரியை), திருமதி பரமேஸ்வரி [ஓய்வு பெற்ற ஆசிரியை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம், சங்கானை] ஆகியோரின் அன்புத்தாயாரும், திரு. குமாரசாமி நாகேந்திரத்தின் [ஓய்வு பெற்ற உதவி முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்] அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல. 31 சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள திரு. சிவகெங்கனின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காகப் பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு இன்று 18-7-95 [செவ்வாய்க்கிழமை] மு.ப 10.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி நா. பரமேஸ்வரி
(மகள்)

டச் வீதி,
சண்டிலிப்பாய்.

(37597)

### மக்களுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

எமது மண்ணை ஆக்கிரமித்து, குழந்தைகள், வயோதிபர்கள் என்று பாராது ஈவிரக்கமின்றி கொன்றொழிப்பதன் மூலம் தமிழினத்தை அழித்துவிடலாம் என்ற நீண்ட நாள் கனவுடன், யாழ். குடாநாட்டின் மீதான பாரிய இராணுவ நடவடிக்கையை "முன்னேறிப் பாய்தல்" எனப் பெயர் சூட்டிக் கொண்டு ஸ்ரீலங்கா ஆயுதப் படையினர் முன்னேறி வந்த வேளை —

எதிர்த்து முகங்கொடுத்து விரட்டியடிக்க போராளிகள் முனைந்து பதில் தாக்குதல் தொடுத்த போது — தோளோடுதோளாக களத்தில், ஆவேசத்துடன் பக்கபலமாக நின்றார்கள் எமது மண்ணில் அசையாத பற்றுக் கொண்ட நாட்டுப் பற்றாளர்கள்.

உண்ணாது, உறங்காது, கடும் ஷெல்தாக்குதல் விமானக்குண்டு வீச்சின் மத்தியிலும் உயிரை துச்சமென மதித்து அவர்கள் கடுமையாக உழைத்தனர். அவர்களது உழைப்பு எமது "புலிப்பாய்ச்சல்" நடவடிக்கையை மென்மேலும் உந்தியது. வெற்றியும் கண்டோம்.

இவ்வாறு உறுதியுடன் செயற்பட்டமை, எமது சுதந்திரத்தை, கௌரவத்தை, எமது எதிர்கால சந்ததியின் அச்சமற்ற வாழ்வை நிலைநாட்டும் ஆற்றல் மிக்கவர்கள் எமது மக்கள் எனும் நம்பிக்கையை ஊட்டி நிற்கிறது. நம்பிக்கையின் ஊற்றுகளாக விளங்குகின்றார்கள் எமது மக்கள்.

இனிவரும் நாட்களிலும் கோர தாண்டவமாட தயாராகும் பேரினவாத வெறியரை, எமது மண்ணிலிருந்து முற்றாக விரட்டியடிக்க நாமனைவரும் ஒன்றிணைந்து வலுப் பெறுவோம் என்ற புது உத்வேகத்துடன் முனைப்புப் பெறும் எமது மக்கள் என்றென்றும் எமது மதிப்பிற்குரியவர்கள்.

உற்றாரை, சொத்துக்களை இழந்து, இன்னலுற்று திசை தெரியாது உடுத்த உடுபுடைவையுடன் தவித்து இடம் பெயர்ந்தவர்களுக்கு உண்டி, உறையுள் தந்தவர்கள் காயமுற்று உயிருக்குப் போராடியவர்களை மீட்டு மருத்துவஞ் செய்தவர்கள். இரத்ததானஞ்செய்தவர்கள் காலமறிந்து முற்று முழுதாக தாமாகவே முன் வந்து உதவிகள் வழங்கியவர்கள் அனைவரும் கௌரவத்திற்குரியவர்கள்.

அல்லற்பட்ட மக்களுக்கு சிறந்த சேவையாற்றியது மட்டுமன்றி, இனிவருங்காலத்திலும் தமிழீழ மக்களுக்கு இன்னல் விளைத்திட ஸ்ரீலங்கா பேரினவாத வெறியர் முயலும்போதெல்லாம் திட சங்கற்பத்துடன் உழைப்போம், முறியடிப்போம், எனக் கூறிச் செயற்படும் அனைத்து வெகுஜன அமைப்புக்கள், கூட்டுறவுத் துறையினர், மதஸ்தாபனங்கள், குறிப்பாக அயராது உழைத்த சிற்றூர்தி சேவைச் சங்கம், முச்சக்கர வாகன சங்கம் முதலிய தனியார் போக்குவரத்துத் துறையினர் வணிகர்கழகங்கள், ஆகியோருக்கு எமது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன், ஸ்ரீலங்கா இராணுவத்தின் கொடூரத்தால் பாதிப்பு உற்றவர்களுக்கு நேயம் மிக்க ஆறுதலையும், பலியாகிய பொதுமக்களது குடும்பங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கிறோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முகாம் மூடப்பட்டது

கொழும்பு, ஜூலை 18

மட்டக்களப்பு மண்முனை மேற்குப் பிரதேசத்தில் உள்ள பாலற்கொடிச்சேனை இராணுவ முகாம் கடந்த வாரம் மூடப்பட்டது. அங்கிருந்த இராணுவத்தினர் அருகில் உள்ள முகாம்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் படையினர் இராணுவ நடவடிக்கை மேற்கொண்டிருப்பதால், புலிகள் கிழக்கில் தாக்குதலை நடத்தலாம் எனக்கருதி இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-8)

## தொடர்பு கொள்க

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த அகதிகள் புனர்வாழ்வுக் கழக ஊழியர்களை இன்று பிரதான அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

### தாக்குதலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கையினால் 8 லட்சம் மக்கள் தமது வீடுகளில் இருந்து குடி எழுப்பப்பட்டு, இடம் பெயர்ந்து, போதிய சுகாதார, உணவு, மருத்துவ வசதிகளின்றி வாடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என்றும் — அந்த மகஜரில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

பிரஜைகள் குழுவின் தலைவர் துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம், செயலாளர் இ. மகேந்திரன் ஆகியோர் கைச்சாத்திட்டு அனுப்பிய அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சமாதானத்துக்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கும், யாழ்ப்பாணத் தமிழர்களை விடுதலைப் புலிகளிடம் இருந்து விடுவிக்கும் நோக்குடனுமே போர் நடத்தப்படுகிறது என்று அண்மையில் நீங்கள் கூறியது முற்றிலும் அர்த்தமற்றதாகும்.

மக்களை விடுவிப்பது என்ற போர்வையில் மக்களுக்குச் சொல்லொணா இன்னல்களைச் செய்து அவர்களை அடக்குமுறைக்கு உட்படுத்தும் நிலையே உருவாக்கப்பட்டுள்ளது.

மோசமடைந்து வரும் சூழ்நிலை இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு ஒன்றைக் காண்பதை இது வெகு கடினமாக்கும்.

எனவே இராணுவத் தாக்குதல் நடத்தும் உங்கள் முடிவை மறுபரிசீலனை செய்து, இராணுவ நடவடிக்கையை உடனடியாக நிறுத்தி, இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பக் கூடியதாக ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து துருப்புகளை வாபஸ் பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இனப் பிரச்சினைக்கு சமாதான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான சகல வழிகளையும் கண்டறியுமாறு கேட்டுக் கொள்கிறோம் — என்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)

### ஆஸியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை நடந்தது.

4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் புலிக்கொடிகளை ஏந்தியவாறு "எமது தலைவர் பிரபாகரன்" என்று கோஷமிட்டவாறு ஊர்வலத்தில் சென்றனர்.

இந்த ஊர்வலம் தொடர்பான செய்தியை ஆஸ்திரேலிய தொலைக்காட்சி ஒளிபரப்பியது. [உ-3-4]

### ஈழத் தமிழருக்கு...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணாவிரதங்கள் இடம்பெற்றன.

ஸ்ரீலங்கா அரசைக் கண்டித்தும், ஈழத் தமிழருக்கு ஏற்பட்ட துயரை அவர்களுடன் சேர்ந்து பங்கிட்டுக் கொள்ளும் நோக்கிலும்—

திராவிடர் கழகம், தமிழர் தேசிய மற்றும் ஈழத் தமிழருக்கு ஆதரவான பல்வேறு குழுக்கள் ஒன்றிணைந்து சென்னையில் உள்ள ஸ்ரீலங்கா துணை தூதரகத்தின் முன்னால் நேற்று உண்ணாவிரதம் இருந்தன.

ஈ. என். டி. எல். எவ் அமைப்பு நேற்று சென்னை அண்ணாசாலையில் பேரணி ஒன்றை நடத்தியது. [உ-4]

# மரண அறிவித்தல்கள்

## வயிரவப்பிள்ளை சுப்பிரமணியம்
## (இளைப்பாறிய சுகாதார பரிசோதகர்)

கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வயிரவப்பிள்ளை சுப்பிரமணியம் 16-7-95 இல் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் தெய்வநாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிறீஸ்கந்தராசா, தேவராணி ஆகியோரின் அன்புத்தந்தையும், அ. பரமேஸ்வரன் (இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்), சகுந்தலாதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், வனிதா, பிரபா, ஜெகன் (உடுவில் மகளிர் கல்லூரி), மயூரன், நிரோசன் (கனடா) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 16-7-95 இல் நடைபெறன.

தகவல்:
தேவராணி பரமேஸ்வரன்
(மகள்)

K. K. S றோட்,
சுன்னாகம்.

[சி/1694]

## திருமதி
## கனகரத்தினம் பரமேஸ்வரி

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் தற்போது கைதடி மேற்கு குமர நகரில் வசித்தவருமான திருமதி கனகரத்தினம் பரமேஸ்வரி நேற்றுக் காலமானார்.

இவர் கனகரத்தினத்தின் அன்பு மனைவியும் ரவி, கலாவதி, சின்னத்தம்பி, கருணாவதி (ஆசிரியை, நகுலேஸ்வரர் மகாவித்தியாலயம் - பட்டப்படிப்புக் கல்லூரி மாணவி), பகீரதன், வசீகரன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்றுப் பிற்பகல் கைதடியில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வ. விஜயகுமார்
[பெறாமகன்]

(37598)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 228/4 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 18-07-1995 இல் அச்சிட்டுப் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org